**செ. கு. எண்:059** **நாள்: 23.06.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 23.6.2019</u>

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பதினெட்டாங்குடி, அந்தோணியார்புரத்தைச் சேர்ந்த திரு.செபாஸ்டியான் என்பவரின் மகன் திரு.ஜெயபால் என்பவர், இராமநாதபுரம் – மதுரை நான்கு வழிச்சாலையில், மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த வாகனம் மோதிய விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், நம்புதாளை கிராமம், கிழக்கு கடற்கரை சாலையில் இராமநாதபுரத்திலிருந்து தொண்டி நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் வாகனமும், சென்னையிலிருந்து தூத்துக்குடி நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் மோதிய விபத்தில், இராமநாதபுரம் மாவட்டம், மணக்குடியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.கருப்பையா (எ) சுரேஷ், தொண்டியைச் சேர்ந்த திரு.அமீர் அலி என்பவரின் மகன் திரு.செய்யது இப்ராகிம் மற்றும் திரு.சேகு உதுமான் ரிபாய் என்பவரின் மகன் திரு அப்துல் கலாம் ஆசாத் ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பா என்பவரின் மகன் திரு. ராமச்சந்திரன் என்பவர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது, மண் சரிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், சைதாப்பேட்டையைச் சேர்ந்த திருமதி இந்திரா என்பவரின் கணவர் திரு. முத்து (எ) சுப்பிரமணி என்பவர் சாலையை கடக்க முற்பட்ட போது, ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சாத்தப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிவேல் என்பவரின் மகன்கள் செல்வன் பரணிதரன், செல்வன் தரணிதரன் மற்றும் திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் செல்வன் பூவரசன் ஆகிய மூன்று சிறுவர்கள் ஏரியில் குளிக்கச் சென்ற போது, தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், பெரியாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ருக்மாங்கதன் என்பவரின் மகன் திரு. அருண்குமார் என்பவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, வீட்டின் கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அல்லியந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மகன் திரு. ஜெயராஜ் மற்றும் திரு. பரசுராமன் என்பவரின் மகன் திரு. அன்பரசு ஆகிய இருவரும் கோவில் தேர் ஊர்வலத்தின் போது, விபத்து ஏற்பட்டு உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், முனியன்குடிசை கிராமத்தைச் சேர்ந்த திரு. பார்த்திபன் என்பவரின் மகன் செல்வன் வெற்றிவேல் என்பவர் மணல் திட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது, பள்ளத்தில் மண் சரிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், கீரைக் கொல்லை கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் (லேட்) என்வரின் மனைவி திருமதி மல்லிகா என்பவர் வீட்டின் கழிவு நீர் தொட்டி அடைப்பை சரிசெய்ய முயன்ற போது எதிர்பாராதவிதமாக விஷ வாயு தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், இணயம்புத்தன்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணிபிள்ளை என்பவரின் மகன் திரு. ராஜ் பைபர் படகில் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர், சடலமாக கண்டெடுக்கப்பட்டார் என்ற செய்தியையும்; கிள்ளியூர் வட்டம், இணயம்புத்தன்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெசித் என்பவரின் மகன் திரு. நெல்சன் என்பவர் கட்டுமரத்தில் கடலில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ரெகுநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பையன் என்பவரின் மகன் திரு. திருப்பதி என்பவர் ரயிலில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், இராயபுரத்தைச் சேர்ந்த திரு. ஜான் என்பவரின் மனைவி திருமதி யாகுலமேரி என்பவர் பழவேற்காடு ஏரியில் படகு சவாரியின் போது விபத்து ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், சிக்கராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி என்பவரின் மகன் திரு. அசோக் என்பவர் கிணற்றை தூர் வாருவதற்கு கயிறு கட்டி கிணற்றில் இறங்கும் போது,

மயக்கமடைந்து தண்ணீரில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 19 நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட பல்வேறு விபத்துக்களில் **உயிரிழந்த 19 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**